## இன்று (03.06.2023) மாலை 4 மணிக்கு

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா!

### பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தரும் கழக தோழர்கள் கவனத்திற்கு!

கூட்டத்தில் கலந்து கொள்ளும் தோழமைக் கட்சி தலைவர்கள் தலைமை கழக நிர்வாகிகள் அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பெரம்பூர் பேரக்ஸ் ரோடு பின்னி மில் மெட்ராஸ் பங்களாவில் நுழைவாயில் 1ல் வாகனத்தை நிறுத்தி விட்டு மேடைக்கு பின்பு உள்ள நுழைவாயிலில் வருகை தருமாறு கேட்டு கொள்கிறேன்.

• மாவட்ட கழக செயாலாளர்கள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் 2வது நுழைவாயில் வழியாக வரவும். வாகனத்தை 10வது நுழைவாயிலில் உள்ள பார்க்கிங்கில் விடவும்.

திரு.வி.க.நகர், எழும்பூர் தொகுதியை சார்ந்த கழக தோழர்கள் பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் உள்ள பார்க்கிங் 12ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 3வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

• துறைமுகம், ராயபுரம், தொகுதிகளை சார்ந்தவர்கள் பாரதி கலை கல்லூரி வழியாக பேசின் பிரிட்ஜ் புளியந்தோப்பு நெடுஞ்சாலை பெரம்பூர் பேரக்ஸ் சாலை ஆட்டு இறைச்சி கூடம் எதிரில் உள்ள பார்கிங்கில் 12வது நுழைவாயிலில் வாகனத்தை நிறுத்தி விட்டு 4வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

திருவொற்றியூர், R.K.நகர் பெரம்பூர் ஆகிய தொகுதியை சார்ந்த கழக தோழர்கள் சத்திய மூர்த்தி நகர் சாலை வழியாக மூர்த்திங்கர் சாலை, கணேசபுரம் சுரங்க பாதை வழியாக ஆட்டு இறைச்சி கூடம் எதிரில் உள்ள பார்க்கிங் 12ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 4வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர், வில்லிவாக்கம், ஆகிய தொகுதியை சார்ந்தவர்கள் அம்பத்தூர் OT , பாடி மேம்பாலம் குன்னூர் நெடுஞ்சாலை, குக்ஸ் ரோடு, ஸ்டீபன்சன் ரோடு வழியாக பார்க்கிங் 8 ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 5வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை மேற்கு மாவட்டம், சென்னை தென்மேற்கு மாவட்டம், சென்னை தெற்கு மாவட்டம், ஆகிய மாவட்டங்களில் இருந்து வருகை தருபவர்கள் கோயம்பேடு பூந்தமல்லி நெடுஞ்சாலை, ஜி.என்.டி.சாலை, அண்ணா சாலை, சிம்சன் சாலை,ஈ.வெ.ரா.சாலை, ரித்தர்டன் சாலை, பெரம்பூர் பேரக்ஸ் சாலை வழியாக பின்னி மில் வாகனம் நிறுத்தும் இடத்திற்கு 8வது நுழைவாயிலில் வாகனத்தை நிறுத்தி விட்டு 6வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

கொளத்தூர்,மாதவரம் தொகுதியை சார்ந்த கழக தோழர்கள் மூலக்கடை மாதவரம் நெடுஞ்சாலை, முரசொலி மாறன் மேம்பாலம் பெரம்பூர் நெடுஞ்சாலை, ஸ்டீபன்சன் சாலையில் உள்ள பார்க்கிங் 8ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 7வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

• ஸ்டீபன்சன் சாலையில் உள்ள 9வது பார்க்கிங் இரு சக்கர வாகனத்திற்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

• பார்க்கிங் எண் 11 அவசர தேவைக்கும் வெளியில் செல்வதற்கும் பயன்படுத்த ஒதுக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிக்கு வாகனத்தில் வருபவர்கள் தயவு கூர்ந்து சாலைகளில் வாகனத்தை நிறுத்தி இறங்காமல் சுமார் 13 ஏக்கர் நிலபரப்பில் அமைக்கப்பட்டுள்ள வாகனம் நிறுத்தும் இடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு கூட்ட அரங்கிற்கு நடந்து வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: 1வது நுழைவாயிலில் கண்டிப்பாக கார் பாஸ் உள்ளவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

## திருவாரூர் மாவட்டம் வருகைதரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

### மாவட்ட கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர்,ஜூன்03.

திருவாரூர் மாவட்டத்திற்கு அரசுமுறை பயணமாக சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட எல்லையில் பிரமாண்ட வரவேற்பு அளிக்க பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்ற மாவட்ட செயல் வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் தீர்மானங்களை விளக்கி பேசினார். மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர்.எஸ்.பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.எஸ்.தியாகபாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்திய துணை பெருங்கண்டத்தின் தவிர்கமுடியாத சக்தியாகவும், தமிழர்களின் வாழ்க்கைத்தரத்தை உலக அரங்கில் உயர்த்திய வரும், தமிழ்மொழியை செம்மொழி தகுதிக்கு உயர்த்தி பாரெங்கும் பட்டொளி வீசி பறக்கச் செய்தவருமான மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழா தொடக்க நாளன்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்பது,

ஒரே தீர்மானத்தில் டெல்டா பகுதிகளில் ஒன்றிய அரசால் அமைக்கப்படவிருந்த நிலக்கரி சுரங்க திட்டத்தை ரத்துசெய்தவரும், உலக அரங்கில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தமிழக தொழில்துறை முதலீட்டை பன்மடங்கு உயர்த்தியவருமான தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்,அரசு முறை பயணமாக திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வதை முன்னிட்டு , மாவட்ட எல்லையில் பிரமாண்ட வரவேற்பளிப்பது,

திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய மன்னார்குடி சட்டமன்ற தொகுதியில் இருந்து தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கு மாவட்ட கழகம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வது,

தலைமைக்கழகத்தால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவரும் உடன் பிறப்பாய் இணைவோம் திட்டத்தின்படி, நிர்வாகிகள் பெற்றிருக்கும் உறுப்பினர் சேர்ப்பு படிவங்களை பூர்த்திசெய்து அவரவர்களுக்கு கொடுக்கப்பட்ட இலக்குகளை முடித்து உடன் மாவட்ட அலுவலகத்தில் சேர்ப்பது ,

தமது 14வது வயதில் இனம் , மொழி காக்க திருவாரூரில் தொடங்கிய மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் அவர்களின் பொதுவாழ்வில் கைகட்டி வாய்பொத்தி வாழ்ந்த திராவிட இனத்தை தலை நிமிர்ந்து நடக்கச்செய்த அந்த தன்னிகரில்லா தலைவருக்கு தலைமை கழகத்தால் திருவாரூரில் அமைக்கப்பட்டுவரும் பிரமாண்ட “ கலைஞர் கோட்டம் “ திறப்புவிழாவிலும் , அதனை தொடர்ந்து நாள் முழுவதும் நடைபெறும் நிகழ்வுகளிலும் பெருந்திரளாக பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ் நன்றி கூறினார். கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா!

### மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பாக இன்று (03/06/2023 - சனிக்கிழமை) அன்று முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை நமது திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கழக கொடியேற்றியும், இனிப்பு வழங்கியும் மக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

நமது திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பில் மாநில, மாவட்ட, மாநகர, நிர்வாகிகள், மற்றும் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கீழ்க்காணும் பகுதிகளுக்கு வருகை தந்து கழக கொடியேற்றிட உள்ளார்கள். அவர்களை அந்தந்த பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட கழகத்தால் அனுப்பப்பட்ட நிர்வாகிகளை ஒருங்கிணைத்து நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| பகுதி கழகங்கள் | பெயர் | பதவி | கொடியேற்றும் இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மலைக்கோட்டை பகுதி | என்.தமிழ்செல்வன் | மாநகர பொருளாளர் | 10 |
| திருவெறும்பூர் பகுதி | இரா.சந்திரமோகன் | மாநகர துணை செயலாளர் | 8 |
| மார்க்கெட் பகுதி | கே.கே.கே.கார்த்தி | பொதுக்குழு உறுப்பினர் | 8 |
| காட்டூர் பகுதி | வி.சரோஜினி | மாநகர துணை செயலாளர் (மகளிர்) | 8 |
| பாலக்கரை பகுதி | பொன்.செல்லையா | மாநகர துணை செயலாளர் | 10 |
| பொன்மலை பகுதி | உ.ராஜேஸ்வரன் | பொதுக்குழு உறுப்பினர் | 10 |
| கலைஞர் நகர் பகுதி | ஆர்.மணிமேகலை | பொதுக்குழு உறுப்பினர் | 10 |
| அரியமங்கலம் பகுதி | பி.ஏ.நூர்கான் | மாநகர அவைத்தலைவர் | 8 |
| திருவெறும்பூர் தெற்கு | என்.கோவிந்தராஜ் | மாவட்ட அவைத்தலைவர் | 9 |
| மணப்பாறை ஒன்றியம் | அ.த.த.செங்குட்டுவன் | மாவட்ட துணை செயலாளர் | 14 |
| வையம்பட்டி தெற்கு | இரா.மூக்கன் | மாவட்ட துணை செயலாளர் | 9 |
| மருங்காபுரி மத்தியம் | லீலா வேலு | மாவட்ட துணை செயலாளர் (மகளிர்) | 17 |
| வையம்பட்டி வடக்கு | இரா.குணசேகரன் | மாவட்ட பொருளாளர் | 9 |
| திருவெறும்பூர் வடக்கு | கே.என்.சேகரன் | தலைமை செயற்குழு உறுப்பினர் | 11 |
| மருங்காபுரி வடக்கு | பி.எம்.சபியுல்லா | தலைமை செயற்குழு உறுப்பினர் | 17 |
| மருங்காபுரி தெற்கு | வண்ணை அரங்கநாதன் | தலைமை செயற்குழு உறுப்பினர் | 15 |
| துவாக்குடி நகரம் | என்.செந்தில் | மாநில நிர்வாகி | 17 |
| மணப்பாறை நகரம் | வி.தனசேகர் | பொதுக்குழு உறுப்பினர் | 27 |
| கூத்தைப்பார் பேரூர் | கவிஞர் சல்மா | மாநில நிர்வாகி | 11 |
| பொன்னம்பட்டி பேரூர் | நவல்பட்டு கே.சண்முகம் | பொதுக்குழு உறுப்பினர் | 15 |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

## தமிழ்நாட்டில் சுற்றுலா தல சிறப்புகளின்

# இணைய தள பக்கங்களை வெளிநாட்டினருக்கு பகிருங்கள்!

### சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 2-

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தலங்களின் சிறப்புகளை தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் இணைய தள பக்கங்களை பார்வையிட்டு பொதுமக்கள் தெரிந்து கொள்வதுடன், வெளிநாடுகளில் வாழும் தங்கள் உறவினர்களுக்கு அவற்றை பகிரவேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறை யின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (01.06.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வண்ணம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்.

சுற்றுலா தலங்களில் வளர்ச்சித்திட்டப்பணிகளை மேற்கொள்ளும்போது வாகன நிறுத்தும் இடம், சுகாதார வளாகம் அமைத்தல் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

சுற்றுலாத்துறையின் மூலம் தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் குறித்த மிகச் சிறந்த குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு பேஸ்புக், டிவிட்டர், இன்ஸ்டாகிராம், யூ டியூப் உள்ளிட்ட பல்வேறு சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ்நாட்டின் சுற்றுலா தலங்களை வான்வெளியில் இருந்து கழுகுப் பார்வையில் பார்க்கும் பரவசத்தை அளிக்கும் வகை உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

இந்த குறும்படங்கள் மற்றும் புகைப்படங்களை லட்சக்கணக்கானவர்கள் உலகம் முழுவதும் பார்வையிட்டுள்ளார்கள். tamilnadutourism.tn.gov.in என்ற இணையதள முகவரி, tntourismoffcl என்ற முகவரி, பேஸ்புக், டிவிட்டர், இன்ஸ்டாகிராம் ஆகிய சமூக வலைதளங்களிலும், Tamil Nadu Tourism என்ற யூ டியூப் முகவரியிலும் இந்த வீடியோக்கள் மற்றும் சுற்றுலா தலங்களின்புகைப்படங்களை பார்வையிட்டு சிறப்புகளை தெரிந்து கொள்ளலாம்.

தமிழ்நாடு அரசு, சுற்றுலாவை நெறிப்படுத்தி சேவையின் தரத்தை உயர்த்தவும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சாகச சுற்றுலா, சுற்றுலா முகாம்கள் நடத்துபவர்கள், சுற்றுலா பயணிகளுக்கு தங்கள் வீடுகளிலேயே தங்கும் வசதி மற்றும் உணவு வழங்குதல் ஆகிய சேவைகளை வழங்கி வரும் சுற்றுலா செயல்பாட்டாளர்களை சுற்றுலாத்துறையில் பதிவு செய்ய அறிவுறுத்தி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் தங்கும் வசதி மற்றும் உணவு வழங்குதல் சேவை வழங்கும் செயல்பாட்டாளர்கள் 449 நபர்களும், சுற்றுலா முகாம் செயல்பாட்டாளர்கள் 15 நபர்களும், சாகச சுற்றுலா செயல்பாட்டாளர்கள் 9 நபர்களும் என மொத்தம் 473 சுற்றுலா செயல்பாட்டாளர்கள் பதிவு செய்துள்ளனர். மற்ற சுற்றுலா செயல்பாட்டாளர்கள் பதிவு செய்துள்ளார்களா என்பதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அலுவலர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.பாரதிதேவி, உதவி தலைமை மேலாளர் (ஓட்டல்கள்) சௌ.வெங்கடேசன், திட்ட பொறியாளர் பால் ஜெபஞானதாஸ், சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள் ஜெ. ஜெயக்குமார், சு.சின்னசாமி உள்பட உதவி செயற் பொறியாளர்கள் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




தருமபுரி அரசு மாதிரிப்பள்ளியில் 12 ஆம் வகுப்பு பயின்று நல்ல மதிப்பெண்கள் பெற்று சென்னையில் உயர்க்கல்வி பெற விரும்பும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நான்கு மாணவிகளுக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலா ரூ.28,112 என மொத்தம் ரூ.1.12 லட்சம் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் சாந்தி,கோயமுத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர். வெ.கீதாலக்ஷ்மி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், ஜி.கே.மணி, தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம்.பெ.சுப்பிரமணி,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.பழனியப்பன்,மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், அமைச்சரின் உதவியாளர் தேவ் ஆனந்த்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு தெற்கு மாவட்டம் முழுவதும்

# கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி - நல உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, ஜூன் 3-

ஈரோடு தெற்கு மாவட்டம் முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி மாவட்டம் முழுவதும் கழகக் கொடிகள் ஏற்றி நல உதவிகள் வழங்கப்படும் என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சு.முத்துசாமி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

நீண்ட பொது வாழ்க்கைக்கு சொந்தகாரர் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராய் நீண்ட நாட்கள் பணியாற்றிய நம் உயிரினும் மேலான தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்தநாளான ஜூன் 3ம் தேதி மக்கள் பயன்பெறும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்த வேண்டுமென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் ஆலோசனைக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்டம் முழுவதும் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் அவரவரது இல்லம் முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்தினை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்புடன் கூடிய நலத்திட்ட உதவி



கள் வழங்கி மற்றும் கழக கொடி ஏற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை மிக சிறப்பாக கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்தநாளை முன்னிட்டு 2023 ஜூன் 3ம் தேதி ஆரம்பித்து 2024 ஜூன் 3ம் தேதி வரை ஓராண்டு காலம் தொடர் நிகழ்ச்சிகளை நாம் நடத்தவுள்ளோம்.

அதற்கான முன்னேற்பாடு களையும் கழக தோழர்கள் செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



சேலம் மத்திய மாவட்டம் எஸ்.கொல்லப்பட்டியில் பட்டாசுகுடோனில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 3 பேர் மரணமடைந்தனர். 6 பேர் காயமுற்றனர் அவர்களின் குடும்பத்திற்கு தமிழ்நாடு முதலைமைச்சர் மரணம் அடைந்தவர்களுக்கு ரூ 3 லட்சமும் காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரம் வழங்க உத்திரவிட்டதையொட்டி சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் இரா. இராஜேந்திரன் பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு நிவாரண நிதியை வழங்கினார் உடன் மாவட்ட வருவாய் அதிகாரி டாக்டர் மேனகா, சேலம் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மணிஆகியோர் இருந்தனர்.



திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தீர்மானங்களை விளக்கி பேசினார். மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம். ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர்.எஸ்.பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.எஸ்.தியாகபாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.